யாக இருப்பதாகத் தெரியவில்லையே. எனவே தலைவரவர்கள். அந்த ஆர்வத்தை உருவாக்க முன்வருவார்களா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : I refuse the allegation with all the force at my command or it is totall baseless. I may now reveal that I was the draftsman of the resolution for the establishment of the Madurai Bench of the Madras High Court so far as the AIADMK is concerned. I drafted the resolution at the Party level and that translated into Tamil at the highest level by the Leader of the Assembly and by the Chief Minister. Although I am not having masters of Tamil, all the three of us put our heads together and it has been passed by the AIADMK General Council unanimously.

Judicial Services.

*53 *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state with reference to the answer given to Legislative Council Starred Question No. 195 on the floor of the Legislative Council on 28th March 1978—

(*a*) whether the orders issued in G.O. Ms. No. 202, Home, dated 31st January 1976, upgrading the posts of all Judicial Second Class Magistrates as Judicial First Class Magistrates and directing that the upgraded posts be integrated with the cadre of District Munsifs, have since been implemented ; and

(b) if not, the action taken for early implementation of the orders ?

நீதித்துறைப் பணிகள்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் 28-3-1978 அன்று சட்டமன்ற மேலவை உடுக்குறியிட்ட வினா எண் 195-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீதித் துறை இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகள் அனைத்தையும் நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகளாக தரம் உயர்த்தி, அவ்வாறு தரம் உயர்த்திய பதவிகளை மாவட்ட முனிசீப் பதவித் தரத்துடன் ஒருங்கிணைக்கு மாறு கட்டளையிட்டு உள்துறையின் 31-1-1976ஆம் நாளிட்ட 202ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் செயல் படுத்தப்பட்டுள்ளனவா?

(இ) இல்லையெனில், அந்த ஆணைகளை விரைவில் செயல்படுத்து வதற்கு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : (*a*) No.

(*b*) Draft amendments to the Tamil Nadu State Judicial Service Rules have been received from the High Court, for approval. They are under the consideration of the Government.

திரு. க. அறிவழகன் : நீதித் துறையில் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் சில இடங்களில் இருக்கிறார்கள். சில இடங் களில் சிவில் வழக்குகளும், கிரிமினல் வழக்குகளும் இருக்கின்றன. ஆனால் இவர்கள் சிவில் வழக்குகளை மாத்திரம் எடுத்துக் கொள்ளும் நிலையும், கிரிமினல் வழக்குகளை எடுத்துக்கொள்ள முடியாத நிலையும் இருக்கிறது. அதனால் பொது மக்கள் கிரிமினல் வழக்குகள் காரணமாக திருப்பத்தூரிலிருந்து வேலூருக்கும், பல்வேறு ஊர்களிலிருந்து வேறு ஊர்களுக்கும் செல்லும் நிலையில் இருக்கிறார்கள். எனவே எல்லா மாஜிஸ்டிரேட்டுகளும் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை விசாரிப்பதற்கான யோசனை அரசிடம் இருக்கிறதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: No such matter is under the consideration of the Government.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(1) பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி அரசு விடுமுறை குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிற சூழ்நிலையில் சென்னை மாவட்டத்திற்கும், கோவை மாவட்டத்திற்கும் 18ஆம் தேதி அரசு விடுமுறை என்று அறிவித்திருக்கிறது. பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாடு முழுவதற்கும் சொந்தக்காரர்.